பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 04 புதன்கிழமை 17.04.2024 கதிர் 161

# சுகாதார அமைச்சுக்கு சொந்தமான 697 வாகனங்களைக் காணோம்

## எதிர்க் கட்சித் தலைவர் தகவல்

மருந்துப்பொருள் மோசடி குறித்துபலர்பேசினாலும்,சுகாதார அமைச்சுக்குச் சொந்தமான 679 வாகனங்கள் காணாமல் போயுள் ளதாக தேசிய கணக்காய்வு அலுவ லகம் அறிவித்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் கீழ், 157 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைஉபகரணங்களைவழங்கி வைத்து உரையாற்றும்போது ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்று அவரைச் சுற்றியுள்ளவர்கள், குறிப்பாக அவரது ஐக்கிய தேசியக் கட்சியினர் கூறிவந்தாலும் இன்னும் அது தொடர்பில் எந்த உறுதியான முடிவையும் அவர் எடுக்கவில்லை என்றே தெரிகின்றது. வரும் ஜூலை மாதமளவில் இது தொடர்பிலான தனது தீர்க்கமான முடிவு தெரியவரும் என்று அவர் பஸில் ராஜபக்சவிடம் அண்மையில் தெரிவித்திருக்கிறாராம்.

பசிலுக்கும் ரணிலுக்கும் இடையில் கடந்த வியாழக்கிழமை இரவு விசேட சந்திப்பு இடம்பெற்றுள்ளது. பசில் அமெரிக்காவில் இருந்து வந்த பின்னர் ஜனாதிபதியை சந்திப்பது இது நான்காவது தடவை. ஆனால் இந்தச் சந்திப்பிலும் இரு தரப்பினருக்கும் இடையில் இணக்கப்பாடுகள் எவையும் எட்டப்படவில்லை என்று தெரிகின்றது.

பஸில் ஜனாதிபதியைச் சந்திக்கச் செல்வதற்குச் சற்று முன்னர், அவரது நண்பர் ஒருவர் தொலைபேசியில் பஸிலை அழைத்தார். ஜனாதிபதியுடனான சந்திப்புப் ☞ 2

## ஜனாதிபதி வேட்பாளராவதா? அடுத்த சில வாரங்களில் முடிவு

### நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச அறிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து அடுத்த சில வாரங்களில் தான் தெளிவான முடிவு ஒன்றை அறிவுக்கவுள்ளதாக நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ச தெரிவித்தார்.

நீதியமைச்சர் விஜதாச ராஜபக்ச அநுராதபுரத்தில் உள்ள அட்மஸ்தானிபதி பல்லேகம் ஹேமரத்ன தேரரிடம் ஆசீர்வாதம் பெற்றதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுமாறு சிறிலங்காசுதந்திரக்கட்சியின் மத்தியகுழுவில் உள்ள பெரும்பான்மையான உறுப்பினர்கள் கோரிக்கையைவிடுத்துள்ளனர். மதிப்புக்குரிய மகசங்கத்தினரும், சமயத் தலைவர்களும் ☞ 2

## சுற்றுலாத்துறையின் மறுமலர்ச்சி பற்றி ஆராய ஜனாதிபதில் ரணில் நுவரெலியாவில் பயணம்

### பெகோ ட்ரெய்ல் மலைப் பாதையூடாக நடை



நுவரெலியாவின் எழில் மிக்க மலைகளை அண்மித்துக்காணப்படும்சுற்றுலாத் தொழில்துறையின் மறுமலர்ச்சி தொடர்பில் ஆராய நேற்றுக் காலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நுவரெலியா-உடபுசலாவை-கோர்ட்லொட்ஜ்தோட்டத்திற்கு நேரடி களப் பயண்தை மேற்கொண்டிருந்தார்.

பெகோ ட்ரெய்ல் (Peko Trail) பாதையினூடாக ஜனாதிபதி நடைப் ☞ 8

## பாலித்த தெவரப்பெரும நேற்று காலமானார்



முன்னாள் இராஜாங்க அமைச்சரும் சமூக சேகவருமான பாலித்த தெவரப் பெரும நேற்று பிற்பகல் காலமானார்.

மத்துகமையில் உள்ள அவரது தோட்டமொன்றில் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளானதன் பின்னர் அவர் களுத்துறை நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து காலமானதாகபொலிஸார்தெரிவித்தனர்.

1960 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி பிறந்த பாலித்த தெவரப்பெரும 2010 முதல் 10 வருட காலம் ☞ 2

## அமைச்சர் விஜயதாசவை போட்டியிட சுதந்திரக் கட்சி அழைப்பு விடவில்லை

### இப்படிச் சொல்கிறார் திலங்க சுமதிபால

அமைச்சர் விஜதாசவுக்கு ஜனாதிபதி வேட்பாளராககளமிறங்குவதற்கான தமது கட்சி எந்த அழைப்பும் விடுக்கவில்லை என்று சிறீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான சிறீலங்கா மக்கள்சுதந்திரக்கூட்டணி அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அந்தக் கட்சியின் பிரமுகர்திலங்கசுமதிபால தலைமையிலான அணியினர் இதனைத்தெரிவித்தனர். இது தொடர்பில் திலங்க மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை ஆதரிப்பது தொடர்பில் கட்சியில் இன்னமும் எவ்விதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை. பொது ☞ 2

## தமிழ் மக்களின் சுமை தாங்கும் தர்ம தேவதை அமைச்சர் டக்ளஸ்

### யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் உருக்கம்



ஆயுதப் போராட்டக் காலங்களிலும் சரி ஜனநாயக வழிமுறையினூடாகவும் சரி தமிழ் மக்களின் சுமை தாங்கும் தர்ம தேவதையாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருந்து வருகின்றார் என்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் சி.சிறிசற்குணராசா தெரிவித்தார். ☞ 8

## அடுத்த வாரம் இலங்கை வருகிறார் ஈரான் ஜனாதிபதி

உமா ஓயா திட்டம் உட்பட மேலும் சில எரிசக்தி திட்டங்களை திறந்து வைப்பதற்காக ஏப்ரல் 24 ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இலங்கைக்கு வரவுள்ளார் என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன.

டயரபா மற்றும் புஹல்பொல ஆகிய இரண்டு அணைக் கட்டுகளை உள்ளடக்கிய அபிவிருத்தி திட்டம் மற்றும் 25 கிலோ மீற்றர் நீர்ப்பாசன சுரங்கப்பாதை ஆகியவற்றை இந்தப் பயணத்தின் போது ஈரானிய ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார்.

இந்தத்திட்டத்தில் தலா 60 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு பெரிய நீர்மின் நிலையங்களும் நிர்மாணிக்கபட்டுள்ளன.

உமா ஓயா பல்நோக்குதிட்டம் இலங்கையில் ஈரானிய நிறுவனங்களின் ☞ 2

## சஜித்தே அடுத்த ஜனாதிபதி ஐ.ம.சக்தியே ஆளும் தரப்பு

### நம்பிக்கை வெளியிடுகிறார் சந்திம வீரக்கொடி எம்.பி.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றால் சஜித் பிரேமதாச ஜனாதிபதியாவார். நாடாளுமன்றத் தெர்தல் நடைபெற்றால் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

காலியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கியமக்கள்சக்தியிலிருந்து 5 பேர் ஆளும் தரப்புடன் இணைந்து கொள்ளப்போகிறார்கள் என்று கூறினார்கள். பின்னர் 25 பேர் இணையவுள்ளனர் என்று கூறினார்கள். ஜா-எலகூட்டத்தில் 45 பேர் மேடை ஏறப்போகிறார்கள் என்று ☞ 2

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் நாணய நிதிய குழுவினருடன் சந்தப்பு

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் சர்வதேசநாணயநிதியத்தின் பிரதிமுகாமைத்துவ பணிப்பாளர் கென்ஜி ஒகமுரா உள்ளிட்ட குழுவினர் இடையே கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் நேற்று ஆரம்பமான சர்வதேசநாணயநிதியம் மற்றும் உலகவங்கியின் அரையாண்டுமாநாட்டின் போது இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. ☞ 2

## வெடுக்குநாறிமலையில் நடந்த சிவராத்திரி தின அட்டூழியம் குறித்த ஆணைக்குழு விசாரணை ஆரம்பம்

வெடுக்குநாறிமலையில் கடந்த சிவராத்திரி தினத்தில் இடம்பெற்ற அட்டூழியங்கள் தொடர்பாக வவுனியா பிராந்திய மனிதஉரிமைகள் ஆணைக்குழு நேற்று விசாரணைகளை முன்னெடுத்தது.

தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரிகள், மற்றும் ஆலயத்தின் செயலாளர், கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் இந்த விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

விசாரணையின் பின்னர் ஆலய நிர்வாகத்தின் செயலாளர் அது குறித்துத் தெரிவித்ததாவது:

நாங்கள் தொல்லியல் இடங்களை சேதப்படுத்தினோம் என்று தொல்பொருள் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பற்றிப் பேசிய அந்த நண்பர், புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில்ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவது குறித்த தனது இறுதி முடிவுஜூலைமாதத்தில்தெரியவரும் என்பதைப் பஸிலிடம் தெரிவிப்பார் என்று எதிர்வுகூறினார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இரகசிய கருத்துக் கணிப்புத் தொடர்பாகவே இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி பேசுவார் என்றும் அந்த நண்பர் பஸில் ராஜபக்சவிடம் கூறியுள்ளார். அந்தக் கருத்துக் கணிப்பு முடிவுகளைத் தாம் ஏற்றுக்கொள்கிறார் என்றும் அதன்படி, மீண்டும் ஒரு கருத்துக்கணிப்பை நடத்தும்படி தாம் புலனாய்வாளர்களைக் கேட்டுள்ளார் என்றும் அதன் முடிவுகள் வந்த பின்னர் தேர்தலில் போட்டியிடுவது குறித்த தனது முடிவை அறிவிப்பார் என்றும் ரணில் சொல்வார் என்று அந்த நண்பர் எடுத்துச் சொல்லியுள்ளார்.

நண்பரின் தகவலுடன் ஜனாதிபதியைச் சந்திக்கச் சென்றார் பஸில். இ-ருவரினது சந்திப்பும் தனிப்படநடந்ததால்அதில்பேசப்பட்ட விடயங்கள்தொடர்பானவிவரங்கள் வெளிவரவில்லை. எனினும் ரணில் பஸில் கலந்துரையாடல் முடிவடைந்த பின்னர் அந்த நண்பர் பசிலை மீண்டும் அழைத்து என்ன நடந்தது என்று கேட்டுள்ளார். பஸில் சிரித்துக்கொண்டே, ''நீ சொன்ன மாதிரித்தான் நடந்தது. உனக்கு அதைச் சொன்னவர் சரியாகச் சொல்லியிருக்கிறார். சந்திப்பில் ரணில் அந்தக் கதையை என்னிடம் நீ கூறிய மாதிரியே தெரிவித்தார். மீண்டும்ஒருகருதுக்கணிப்புநடத்த உத்தரவிட்டுள்ளேன்என்றார்.ஜூலை மாதம்தனதுகருத்தைதெரிவிப்பேன் என்றார். அப்போதுநடக்கவேண்டிய அனைத்தும் முடிந்திருக்கும்'' என்றார்.

................

ஜேவிபி அண்மைக் காலத்தில் வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக்கொண்ட இரண்டு சந்தர்ப்பங்கள் அமைந்துள்ளன. முதலாவது பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பில் சஜித் பிரேமதாஸவை தமது கட்சித் தலைவர் அனுரகுமாரவுடன் விவாதம் செய்ய வருமாறு வம்புக்கிழுத்த சந்தர்ப்பம். இரண்டாவது யாழ்ப்பாணத்தில் தாம் நடத்திய வங்கியாளர்கள் மாநாட்டிற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அழையா விருந்தினராகக் கலந்துகொண்டார் என்று அந்தக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரன் தெரிவித்திருந்தது.

முதலில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழுவும் ஜேவிபியின் பொருளாதாரக் குழுவும் இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்புத் தொடர்பில் விவாதிப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வந்தது. இவ்வாறான ஒரு விவாதத்திற்கு வரும்படி ஐக்கிய மக்கள் சக்தி ஜேவிபியைச் சீண்டிக்கொண்டிருந்தது. அதற்குப் பதிலடி கொடுப்பதாக நினைத்துக்கொண்டுபொருளாதாரக் குழுவோடு எல்லாம் பேசமுடியாது, வேண்டுமானால் ஐ.ம.ச. தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் தேசிய மக்கள்சக்தித்தலைவர் அனுரகுமார திஸநாயக்க விவாதம் செய்வார் என்று ஜேவிபியின் ஹந்துன்நெத்தி தெரிவித்திருந்தார்.

அவரது அழைப்பை சஜித் ஏற்றுக்கொண்டார். விவாதத்திற்குத் தான் தயார் என்றார். ஆனால் இப்போது, அந்த அழைப்புக்கு அனுர தரப்பிலிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. பதிலாக ஐ.ம.ச. பொருளாதாரக் குழுவுடன் பேச ஜேவிபி தயாராகியது. ஆனால், கடைசிநேரத்தில் அந்த விவாதத்தை ஐ.ம.ச. தவிர்த்துவிட்டது. சஜித்தைச் சந்திக்க அனுர பின்னடிப்பதால் இந்த முடிவுஎட்டப்பட்டதோதெரியவில்லை. எப்படியிருந்தாலும் பரபரப்பைக் கிளப்பிய இந்தச் சந்திப்புக்கள் நடக்கவேயில்லை. அதற்கான அறிகுறியும் தெரியவில்லை.

மற்றொரு பக்கத்தில் சுமந்திரன் அழையா விருந்தாளியாக ஜேவிபி கூட்டத்திற்கு வந்திருந்தார் என்று சந்திரசேகரன் கூறியதை ஜேவிபி தலைவர் அனுர குமாரவே மறுத்துள்ளார். தான் நேரடியாக அழைத்ததன் பேரிலேயே சுமந்திரன் வந்தார் என்று அவர் உறுதிப்படுத்தினார். அந்த விவரம் சந்திரசேகரனுக்குத் தெரியாததால் அவர் அப்படிக் கூறியிருக்கக்கூடும் என்று ஜேவிபி தலைமையால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைத் தெரிவித்தார். அம்பாந்தோட்டை, கிரிந்த முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வு நேற்று இடம்பெற்றது. எதிர்க்கட்சித்தலைவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

காணாமற்போனவற்றில் 240 வாகனங்கள் குறித்த சில தகவல்கள்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, ஆனால் சுகாதார அமைச்சு மேலதிக தகவல்களை கணக்காய்வு அலுவலகத்திற்கு ஒப்படைக்கவில்லை. மேலும்439வாகனங்கள் குறித்து எந்தத் தகவலும் இல்லை.

வங்குரோத்தாகிய நாட்டில்கூட இதுபோன்ற சம்பவங்கள் நடக்கும் போது பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அரச நிறுவனங்களில் இவ்வாறான பல முறைகேடுகள் காணப்படுவதால், இந்த மோசடிகள், திருட்டுகள்ஒவ்வொன்றும்தெளிவாக விசாரிக்கப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படும், இதற்கான நடவடிக்கைகளை எமது ஆட்சியில் முன்னெடுப்போம்

நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கு, அரச மற்றும் தனியார் கூட்டு ஒப்பந்தங்களை மையமாகக்கொண்டதிட்டங்களுக்கு நாம் செல்ல வேண்டும். நாட்டில் நிதி மற்றும் மூலதனப் பற்றாக்குறை மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகள்இல்லாதகாரணத்தினால் இந்த யோசனை சரியாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

தேர்தல் வருடத்தில் ஆளும் தரப்பினர் தமது நட்பு வட்டார நண்பர்களுடன் இணைந்து, அரச -தனியார் ஒப்பந்தங்களை அமுல்படுத்தி, பெருமளவிலான காணிக் கொள்ளைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் இந்த காணி கொள்ளை நடந்து வருகிறது.

இதற்காக ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு, பெருமளவில் இடம் கைப்பற்றல்நடந்துவருகிறது. இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் யாரும் சிக்க வேண்டாம், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இந்த ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்படும்

நாட்டின்பணத்தைசெலவழித்து உலகம்சுற்றிவரும்தலைவர்களும், சேவைகளை முன்னெடுக்க முடியாத வெறும் வாய் பேச்சு தலைவர்களும், யாராவது நல்லது செய்ய முற்படும் போது விமர்சனங்களை முன்னெடுக்கும் தலைவர்களும்தாராளமாகநாட்டில் இருக்கின்றனர்.

நாடே வங்குரோத்தான இவ்வேளையில் சவாரி செய்யும் தலைவரும், கட்சிக்கு கிடைத்த பணத்தை செலவு செய்யும் தலைவர்களும், பொய்யான சோபன நிகழ்ச்சிகளை நடத்தி மக்களை தம் பக்கம் ஈர்க்கும் தலைவர்களும்உள்ளனர். நாட்டுக்கு எத்தகையதொருதலைவர் தேவை என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

நட்புவட்டாரமுதலாளித்துவத்தால் இந்நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. நாட்டுக்குத் தேவை போலி குடும்பத்துக்கு அஞ்சும் தலைமையா? வெளிநாட்டு பயணங்கள் மூலம் நாட்டின் நிதி வளத்தை பொய்யாக அழிக்கும் சவாரித் தலைவர்களா? அல்லது வெறும்வாய்ச்சொல்தலைவர்களா? இல்லை என்றால் அதிகாரம் இல்லாமலும் மக்களுக்காக சேவைகளை முன்னெடுக்கும் தலைவர்களா? என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் எனவும், இந்தமுடிவுமக்களின்கைகளிலேயே உள்ளது.

வங்குரோத்தான நாட்டைக் கட்டியெழுப்பும் தலைமையே தேவை. தற்போதுள்ள வேலைத் திட்டத்தையும்,மீண்டுவருவதற்கான தொலைநோக்குப் பார்வையையும் அமுல்படுத்துவதன் மூலம் யதார்த்தமாகவும்உண்மையாகவும் நாட்டுக்காகஉழைக்கும்தலைவர்கள் தமது வேலைத்திட்டத்தை நாட்டு மக்களிடம் முன்வைக்க வேண்டும்.

நாட்டைகட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டம் இல்லாத காரணத்தினால், அனுபவம் வாய்ந்த பொறியியலாளர்கள்மற்றும்தொழில் வல்லுநர்களுக்கு சரியான சம்பளம் கிடைப்பதில்லை. அதனால்அவர்கள் ஆயிரக்கணக்கில் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். பெருமளவில் மூளைசாலிகள் வெளியேற்றம் ஏற்பட்டு வருகிறது.

இவ்வாறு தொழில் வல்லுநர்களை நாடு இழந்தால், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்துக்கும் ஏற்படும் பாதிப்பை சொல்லி மாளாது. நாட்டை விட்டு வெளியேறாமல் இந்நாட்டில் இருந்துகொண்டே நாட்டைகட்டியெழுப்பத் தேவையான சூழலை உருவாக்க வேண்டும் என்றார்.

## அடுத்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகப்பெரிய தொழில்நுட்ப மற்றும் பொறியியல் சேவைத் திட்டங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

இந்தத் திட்டம் இலங்கையின் தென்கிழக்கில்கொழும்புநகரிலிருந்து 200 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

5,000 ஏக்கர் விவசாய நிலங்களுக்கான நீர்ப்பாசனத்தை மேம்படுத்துவதும், 145 மில்லியன் கனமீற்றர் நீரினை கொண்டு செல்வதுடன் ஒரு வருடத்தில் 290 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதும் இத்திட்டத்தின் நோக்கம்.

## அமைச்சர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர் தொடர்பில் எவருடனும் கலந்துரையாடக்கூட இல்லை. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சி உத்தியோகபூர்வமாக எந்த செயற்பாட்டிலும் ஈடுபடவில்லை.

ஆகவே, அப்படி யாராவது அறிவித்தார் அதற்கும் எமது கட்சியின் தீர்மானத்துக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை - என்றார்.

## பாலித்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சி சார்பல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

அன்னார் உள்நாட்டலுவல்கள் மற்றும்கலாசாரபிரதியமைச்சராகவும் வனஜீவராசிகள் இராஜாங்க அமைச்சராகவும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நெருக்கடியான, இயற்கைப் பேரிடரான நேரங்களில் தானே களத்தில் இறங்கி பொதுமக்களுக்குச் சேவையாற்றக்கூடிய மிகச் சிறந்த சமூக சேவகராக மக்கள் மத்தியில் மதிக்கப்பட்டவர் தெவரப்பெரும.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்னிடத்தில்இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளனர். அது தொடர்பில் அடுத்த சில வாரங்களில் தீர்மானம் எடுக்கவுள்ளேன்.

நாட்டிலுள்ளஎந்தவொருஅரசியல் கட்சியின் மீதும் பொதுமக்களுக்கு நம்பிக்கையில்லை. எனவேஅடுத்து நடைபெறவுள்ளதேர்தல்தீர்க்கமான தேர்தலாக அமையும். கட்சியின் தீர்மானத்துக்கு அப்பால் முடிவுகள் அமைவதற்கான வாய்ப்புக்களே உள்ளன.

கட்சியின் தீர்மானத்துக்காக வாக்களிக்கும் வாக்காளர்கள் எதிர்காலத்தில் இருக்கப்போவதில்லை. போட்டியிடும்வேட்பாளரை அறிவித்ததன் பின்னரேயே அது தொடர்பில் மக்கள் தீர்மானம் எடுப்பார்கள்.

நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடாத பட்சத்தில் ரணிலை ஆதரிப்பேன். நாடு நெருக்கடி நிலையில் இருந்தபோது யாரும் பொறுப்பேற்பதற்கு முன்வராத நிலையில் அந்தப் பொறுப்பினை ஏற்று குறுகிய காலத்துக்குள்நாட்டை வழமையான நிலைமைக்கு அவர் கொண்டுவந்துள்ளார்.

நாட்டு மக்கள் மாற்றமொன்றை எதிர்நோக்குகின்றனர். அந்த மாற்றத்துக்கானஅடித்தளம்தற்போது இடம்பெற்றுள்ளது. பொது ஜன பெரமுனவின் ஆட்சியையோ அல்லது அவர்களின் வேட்பாளரையோ நாட்டு மக்கள் விரும்பவில்லை. அதேநேரம் அவர்களாலும்களமிறக்கும் அளவிற்கு ஒரு வேட்பாளரை அடையாளம் காண முடியாத நிலையே உள்ளது - என்றார்.

## சஜித்தே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார்கள். பின்னர் அவர்கள் குளியாப்பிட்டிய கூட்டத்தில் இணையவுள்ளனர் என்றனர்.

ஆனால்எதுவும்நடக்கவில்லை. யாரும் இடம்மாறவில்லை. ஆகவே அடுத்து ஜனாதிபதி தோதல் நடைபெற்றால் சஜித் பிரேமதாசவே ஜனாதிபதியாக வருவார்.

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றால் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பிலான ஆளும் ஆட்சி அதிகாரத்தினை ஏற்றுக்கொள்ளும். இதுமுடிந்தமுடிவாகிவிட்டதுஎன்றார்.

## சிவராத்திரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தினர் சில ஆவணங்களை வழங்கியிருந்தனர். குறிப்பாக மலை உச்சியில் தீ மூட்டினோம்என்று ஒருவிடயத்தை முன்வைத்திருந்தனர்.அதனாலேயே கைதுகள் இடம்பெற்றதாகத் தெரிவித்தனர்.

நாங்கள் அப்படித் தீ மூட்டியமைக்கான எந்த ஆதாரங்களும் சமர்ப்பிக்கபடவில்லை. அத்துடன் அவர்களது கருத்துக்களில் முரண்பாடுகள் இருந்தன. தீ மூட்டியதாக இவர்கள் காட்டிய புகைப்படமானது முதல் நாள்இரவில் அங்கு காவல் கடமையில் இருந்த நெடுங்கேணி பொலிஸாரால் கொழுத்தப்பட்ட தீ என்பதற்கான சான்றுகளை நாம் முன்வைத்தோம் - என்றார்.

இதேவேளை குறித்த விசாரணை தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளதுடன், வரும் நாட்களில் நெடுங்கேணி பொலிஸார் மற்றும் வனவளத் திணைக்களத்தினரும் அழைக்கப் படவுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகின்றது. (100)

## நிதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய பொருளாதார நிலைமையிலிருந்து முன்னேறுவதற்காக சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல் மற்றும் சிறப்பான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் இலங்கை அதிகாரிகளுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

அதுகுறித்து, அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவிக்கையில், சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து இலங்கை அடைந்த வெற்றியை தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுத்தினார்.

சமீபத்திய சமூக - பொருளாதார முன்னேற்றங்கள், சர்வதேசநாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் பாரிய பொருளாதார மறுசீரமைப்புகள் மற்றும் திட்டங்களை தொடர்வதற்கான இலங்கை அதிகாரிகளின் அர்ப்பணிப்பு தொடர்பில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஷெஹான் சேமசிங்க, சர்வதேசநாணயநிதியத்தின் நிறைவேற்று பணிப்பாளர், கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனையும் சந்தித்தார்.

சர்வதேச நாணய நிதியத் தின் இரண்டாவது கடன் தவணைக்கான மீளாய்வுகளை நிறைவு செய்வதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர் பரமேஸ்வரன் ஐயரையும் அரையாண்டு மாநாட்டின் போது சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

உலக வங்கியின் உள்ளக மறுசீரமைப்புகளும்மாற்றங்களும் இலங்கை போன்ற நாடுகளுக்கு எவ்வாறு பயனளிக்கும் என்பது குறித்துபரமேஸ்வரன்ஐயர்விளக்கமளித்ததுடன், இலங்கைக்குஅதிகபட்ச ஆதரவை வழங்குவதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

இதனிடையே, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க உள்ளிட்ட குழுவினர் சர்வதேச புரிந்துணர்விற்கான பொருளாதார பேரவையின் கூட்டத்திலும் கலந்துகொண்டனர். நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறித்து அங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# உணவு பாதுகாப்பு தொடர்பான ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்காதோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

## சுகாதார வைத்திய அதிகாரி உவைஸ் எச்சரிக்கை

(எஸ்.அஷ்ரப்கான்)

நுகர்வோருக்கு தரமற்ற மற்றும் சுகாதாரமற்ற உணவுகளை வழங்கும் நிறுவனங்களுக்கு எதிராக பாரபட்சமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எட்.எம்.உவைஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

உணவை விற்பனை செய்யும் மற்றும் அவற்றைக் கையாளும் நிறுவனங்களை மேற்பார்வை செய்வது உணவின் தரம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிசெய்து மக்களுக்கு பாதுகாப்பான உணவை வழங்குவதற்காகும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் உணவு நிறுவனங்களுக்குரிய சட்ட ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிக்காது அலட்சியமாக இருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உணவை விற்பனை செய்யும் மற்றும் அவற்றைக் கையாளும் நிறுவனங்களில் காணப்படுகின்ற சுகாதார சீர்கேடுகள் தொடர்பில் எமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு கடந்த சில தினங்களாக பொத்துவில் பிரதேசத்தில் உள்ள உணவகங்கள் சோதனை செய்யப்பட்டு வருகின்றன. நேரடியாக உணவைக் கையாளும் நிறுவனங்களும் அதில் வேலைசெய்பவர்களும் ஒருமாதகாலப்பகுதிக்குள் பதிவு செய்துகொள்ள வேண்டும். அத்துடன் வேலை செய்பவர்கள் தமக்குரிய மருத்துவ சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சுகாதாரமற்ற மற்றும் பாதுகாப்பற்ற உணவுகளாலும், பிழையான உணவுப் பழக்கத்தாலுமே இன்று அதிகமானோர் பல்வேறு நோய்களுக்கு ஆளாகுகின்றனர். உணவுகளைக் கையாளும் மற்றும் அவற்றை விற்பனை செய்யும் நிறுவனங்கள் பொதுமக்களுக்கு சுகாதாரமான உணவுகளை வழங்கும் பொருட்டு பொறுப்புடன் செயற்பட வேண்டும். - என்றார். (05)



# நுவரெலியாவை நோக்கி சுற்றுவிகள் படையெடுப்பு




பொதுவாக நாட்டில் கடந்த சில மாதங்களாக சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருகின்றது.

அந்த வகையில் நுவரெலியாவில் வருடந்தோறும் நடைபெறும் ஏப்ரல் வசந்தகால களியாட்ட நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் வெளிமா வட்டங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் பெருந்தொகையான சுற்றுலா பயணிகள் நுவரெலியாவுக்கு வருகை தருகின்றனர்.

நுவரெலியா மாநகர சபை ஏற்பாட்டில் இம்மாதம் முதலாம் திகதி முதல் தொடர்ச்சியாக 30ஆம் திகதி வரை தினந்தோறும் கலை கலாசார விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறும்.

இந்த நாள்களில் நுவரெலியாவுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதற்கு காலநிலை பொருத்தமானதாக உள்ளமையாலும் நாட்டில் அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையிலும், சித்திரை புத்தாண்டு பண்டிகை விடுமுறை வழங்கப்பட்டுள்ளமையால் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நுவரெலியாவுக்கு விடுமுறையை கழிப்பதற்காக வருகை தந்துள்ளனர்.





இதனால் நுவரெலியா நகர் ஹக்கல பூங்கா, விக்டோரியா பூங்கா, கிரகறி பூங்கா, கிறகறி வாவி கரையிலும், உலக முடிவு, சீத்தாஎலிய கோவில், வரலாற்று சிறப்புமிக்க தபால் நிலையம் போன்ற பகுதிகளிலும் சுற்றுலா பயணிகள் கூட்டங்கூட்டமாக குவிந்து வருகின்றனர்.

அத்தோடு நுவரெலியா கிறகரி வாவி கரையில் அமைக்கப்பட்டுள்ள களியாட்ட நிகழ்வுகளிலும், மட்டக் குதிரை சவாரி செய்யும் இடத்திலும் பெருந்தொகையான சுற்றுலா பயணிகள் குவிந்து காணப்படுகின்றனர்.

சுற்றுலா பயணிகள் விடுமுறை நாள்களில் நுவரெலியாவுக்கு வருகை தருவதால் வாகன தரிப்பிடங்களிலும் நுவரெலியா – பதுளை, நுவரெலியா – கண்டி, நுவரெலியா–ஹற்றன் போன்ற பிரதான வீதிகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் வாகனங்கள் அணிவகுந்து ஊர்ந்து செல்கின்றன. இதனால் பிரதான நுழைவாயில் சோதனைச்சாவடி, நகர்ப்பகுதிகளில் கூடுதலாக போக்குவரத்து பொலிஸாரை பணியில் அமர்த்தி போக்குவரத்து நெரிசலை துரிதமாக சீர் செய்து வருகின்றனர். அத்துடன் பொது இடங்களிலும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்புக்காக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கடந்த வருடங்களை விட இம்முறை பெருந்திரளான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக நுவரெலியாவிலுள்ள சுற்றுலா ஹோட்டல்கள், சுற்றுலா விடுதிகளிலும் முன்கூட்டியே பதிவுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (05)

# கற்பிட்டி உதைபந்தாட்ட தொடரின் சம்பியனானது யுனைட்டட் அணி



(சியாஜ்)

கற்பிட்டி பேர்ல்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நோன்புப் பெருநாளை முன்னிட்டு அணிக்கு 07 பேர் கொண்ட கற்பிட்டி உதைபந்தாட்ட லீக்- 2024 தொடர் கடந்த 13 ஆம், 14 ஆம் திகதிகளில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

கற்பிட்டி நகரில் உள்ள உதைபந்தாட்ட வீரர்கள் ஏலத்தின் அடிப்படையில் பேர்ல்ஸ் , யுனைட்டட்



, ப்ளஸி கைஸ் , வெஸ்ட் ட்ரைகர்ஸ் , லேகர்ஸ் மற்றும் ஹைபர் வேல்ஸ் ஆகிய ஆறு அணிகளுக்கு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன்படி இறுதிப் போட்டிக்கு கற்பிட்டி பேர்ல்ஸ் அணியும் யுனைட்டட் அணியும் தகுதி பெற்றன. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பெற்றுக் கொள்ளாமல் போட்டி சமநிலையில் முடிவுக்கு வந்தது. இதனையடுத்து நடப்பாண்டின் சம்பியனைத் தீர்மானிக்க பெனால்டி உதை இரு அணிகளுக்கும் வழங்கப்பட்டது. இதில் யுனைட்டட் அணியின் கோல் காப்பாளர் பர்ஹான் எதிரணியின் இரு கோல்களை தடுத்ததன் காரணமாக யுனைட்டட் அணி 6:5 என்ற பெனால்டி கோல்கள் அடிப்படையில் செம்பியன் கிண்ணத்தை வெற்றி கொண்டது.

செம்பியனான யுனைட்டட் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 50,000/- பணமும் இரண்டாம் இடம் பிடித்த பேர்ல்ஸ் அணிக்கு கிண்ணமும் 25,000/- பணமும் வழங்கப்பட்டன. அத்துடன் தொடரின் சிறந்த கோல் காப்பாளராக யுனைட்டட் அணியின் பர்ஹான், சிறந்த வீரராக ஹைபர் வேல்ஸ் அணியின் அஹதீர், சிறந்த இளம் வீரராக பேர்ல்ஸ் அணியின் ஹிசாம் ஆகியோர் தெரிவானார்கள். அத்துடன் இத்தொடரில் அதிக கோல்கள் அடித்து இவ்வாண்டின் தங்கக் காலணி விருதை பேர்ல்ஸ் அணியின் ஜாஹித் தன்வசப் படுத்தினார்.

அத்தோடு இத்தொடரில் பங்குபற்றுவதற்காக கத்தார் நாட்டில் இருந்து விடுமுறை பெற்று வந்து கடந்த 8 ஆம் திகதி மரணம் அடைந்த ஐயூப் நுஸ்கான் மற்றும் கடந்த 2022 ஆம் ஆண்டு நோன்புப் பெருநாள் தினத்தில் அகால மரணம் அடைந்த பேர்ல்ஸ் அணியின் வீரரும் முன்னாள் கற்பிட்டி பிரதேச சபையின் உறுப்பினருமான அக்மல் ஆகிய இருவரையும் கௌரவிக்கும் முகமாக நினைவுச் சீருடைகள் இருவரின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலும் செம்பியன் கிண்ணத்தை பெற்றுக் கொண்ட யுனைட்டட் அணியின் உரிமையாளர் ஹம்தூன் நஜாத் மரணமான வீரர் ஐயூப் நுஸ்கான் சமர்ப்பணமாக அவரின் சகோதரர் ஐயூப் நுஸ்மிடம் கிண்ணத்தை கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சுகாதாரத்துறையின் ஊழல்கள் அம்பலப்படுத்தப்படவேண்டும்

முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். பதிவு செய்யப்படாத நிறுவனங்களிடம் இருந்து மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்தன் மூலம் நடந்ததாகக் கூறப்படும் மோசடி தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன. பொது மக்களின் பயன்பாட்டுக்கு எனக் கொள்வனவு செய்யப்பட்ட இந்த மருந்துகளினால் அவர்களுக்குப் பேராபத்து ஏற்படும் வாய்ப்புக்கள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதனால் பிணைகூட வழங்கப்படாமல் முன்னாள் அமைச்சர் தொடர்ந்தும் மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பின்னணியில் இப்போது சுகாதார அமைச்சுக்குச் சொந்தமான 697 வாகனங்களைக் காணவில்லை என்று கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்திருக்கிறார். காணாமற்போனவற்றில் 240 வாகனங்கள் குறித்த சில தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, ஆனால் சுகாதார அமைச்சு மேலதிக தகவல்களை கணக்காய்வு அலுவலகத்திற்கு ஒப்படைக்கவில்லை. மேலும் 439 வாகனங்கள் குறித்து எந்தத் தகவலும் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஏற்கனவே முன்னாள் சுகாதார அமைச்சரும் அமைச்சின் உயர் அதிகாரிகள் பலரும் மோசடிக் குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில், இதுபோன்ற ஒரு தகவல் மேலும் மோசடி பற்றிய அச்சத்தையே பொது மக்கள் மனதில் ஏற்படுத்தும். அமைச்சில் இருந்து சுமார் 700 வாகனங்கள் காணாமற்போயிருக்கின்றன என்பது சிறிய, புறக்கணிக்கக்கூடிய விடயம் அல்ல. சுகாதார அமைச்சுக்கு பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் பல வாகனங்கள் அன்பளிப்பாகக் கிடைத்தாலும், அமைச்சின் பயன்பாட்டுக்கான வாகனங்கள் பெருமளவில் அரசால் கொள்வனவு செய்யப்படுகின்றன. எனவே அவை தொடர்பில் தீவிரமான கண்காணிப்பும், பாராமரிப்பும் இருப்பது அவசியம்.

இலங்கையின் சுகாதரத்துறை என்பது தெற்காசியாவிலேயே நன்கு வளர்ச்சியடைந்ததாக இருந்தபோதும் அது பல்வேறு குறைபாடுகளையும் மோசடிகளையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது என்பதை தற்போதைய செய்திகள் உணர்த்துகின்றன. மற்றைய துறைகளைப் போன்று அல்லாமல் சுகாதாரத் துறை என்பது பொது மக்களின் உயிர்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியது என்பதால் அது நேர்மையானதாகவும் வெளிப்படைத் தன்மையுள்ளதாகவும் இருப்பது அவசியம்.

எனவே, காணாமற்போயிருக்கும் வாகனங்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளுக்கு உத்தரவிடுவதுடன், சுகாதாரத்துறையின் மோசடிகள் மற்றும் அதன் மறுசீரமைப்புத் தொடர்பில் கவனம் செலுத்துவதற்காக அரசுத் தலைவர் ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதும் அவசியமானது. ஆளும் தரப்பினர் இது தொடர்பில் அவசரமாக நடவடிக்கை எடுப்பது காலத் தேவை.

# விக்கிலீக்ஸ் வழக்கை கைவிடும் அமெரிக்கா? நாடுகடத்தலுக்கு பிரிட்டன் நீதிமன்று எதிர்ப்பு !!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

இவ்வருட பெப்ரவரியில், ஆஸ்திரேலியாவின் பிரதமர் அந்தோனி அல்பானீஸ் ஆதரவுடன், ஜூலியன் அசாஞ்சே தனது சொந்த தாய்நாட்டிற்கு திரும்ப வேண்டும் என்று அழைப்பு விடுத்து ஒரு பிரேரணையை முன்வைத்தது.






இவ்வாரம் அமெரிக்காவில் அசாஞ்ஜேயின் வழக்கை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஆஸ்திரேலியாவின் கோரிக்கைக்கு அவரிடம் பதில் இருக்கிறதா என்று ஒரு பத்திரிகையாளர் அமெரிக்க அதிபர் பைடனிடம் கேட்டார். நாங்கள் அதை பரிசீலித்து வருகிறோம்,' என்று அவர் பதிலளித்தார்.

ஜூலியன் அசாஞ்சே மீதான வழக்கை கைவிடுவது குறித்து அமெரிக்கா தற்போது பரிசீலித்து வருகிறது என அதிபர் ஜோ பைடன் கூறியுள்ளார்.




### ஆஸ்திரேலியா கோரிக்கை:

விக்கிலீக்ஸ் நிறுவனரான 52 வயதான ஜூலியன் அசாஞ்சேக்கு எதிரான உளவு பார்த்த குற்றச்சாட்டை கைவிடவேண்டும் என்ற ஆஸ்திரேலியாவின் கோரிக்கையையே வெள்ளை மாளிகை பரிசீலித்து வருவதாக அதிபர் ஜோ பைடன் கூறுகின்றார்.

இரகசிய இராணுவ ஆவணங்களைக் கசியவிட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டினை அசாஞ்சே பத்திரிகை - கருத்துச் சுதந்திரத்திற்கான செயல் என்று கூறுகிறார்.

இது குறித்து அசாஞ்சேவின் மனைவி ஸ்டெல்லா அமெரிக்க ஜனாதிபதியின் வார்த்தைகளின்படி, நேர்மையானதை சரியானதைச் செய்ய வேண்டும் என்று பைடனை வலியுறுத்தி உள்ளார்.

### சுயாதீன கருத்துச் சுதந்திரம்:

இரகசியம் என்று அரசுகளால் அறிவிக்கப்படும் கோப்புகளிலிருந்து தகவல்களைப் பெற்று வெளியிடும் பத்திரிகையாளர்களின் முயற்சிகளுக்குப் பெரிய தடையாக அமைவது போலியான குற்றச்சாட்டுக்களும் அடக்குமுறைகளுமே. சுயாதீன கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டு, ஜூலியன் அசாஞ்சே

நாடு கடத்தப்பட்டால், விசிலூதிகளுக்கு என்ன பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாகும்.

2012களில் உலக அரசியலில் அதிர்வை ஏற்படுத்திய ஜூலியன் அசாஞ்சே, அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்படுவாரா எனும் கேள்விக்கு பிரிட்டிஷ் நீதிமன்றம் மார்ச் 27 தீர்ப்பு அளித்துள்ளது.

### நாடு கடத்தலுக்கு பிரிட்டன் எதிர்ப்பு?

விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேவுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்படாது என்று அமெரிக்க அரசு உத்தரவாதம் அளிக்குமா என பிரிட்டிஷ் உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது. இது குறித்து மூன்று வாரங்களுக்குள் பதில் அளிக்க நீதிபதி டேமி விக்டோரியா ஷார்ப் உத்தரவிட்டுள்ளார்.

மேற்குலகின் அட்டூழியங்களையும், அத்துமீறல்களை வெளிப்படுத்தியவர் ஜூலியன் அசாஞ்சே. அவரின் மீதான கைதானது, அமெரிக்க அரசின் செயற்பாடு ஊடக கருத்துச் சுதந்திர மீறலாகவும் கருதலாம். ஆயினும் மேற்குலகின் அரசரகசியங்களை காட்டிக் கொடுத்தவர் என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

ஈராக் போரில் பாக்தாத்தில் அமெரிக்கா நடத்திய வான் தாக்குதலில், ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த நிருபர் கொல்லப்பட்டது உள்பட பல




தகவல்கள் ஜூலியன் அசாஞ்சே (Julian Assange) வெளியிட்ட ஆவணங்களில் இருந்தன. இவற்றில் பல விஷயங்கள் ஆட்சியாளர்களின் அத்துமீறல்களையே வெளிக்கொணர்ந்தன.

இருப்பினும் கடந்த ஒரு தசாப்தமாக அசாஞ்சே வேட்டையாடப்படுகிறார். அவரால் சுதந்திரமாக இருக்கமுடியவில்லை. அவர் போகும் இடமெல்லாம் அமெரிக்க அரசு அவரைத் துரத்தியடிக்கிறது. கைது செய்து தன் சிறைகளளில் தள்ளுவதற்கு பெரும் பிரயத்தனப்படுகின்றது.

ஜனநாயக விழுமியங்களுக்கும், அரசமைப்புச் சட்டங்களுக்கும்கூட அப்பாற்பட்டு அரசு எனும்

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# விக்கிலீக்ஸ் வழக்கை கைவிடும் அமெரிக்கா?

4ம் பக்க தொடர்ச்சி...........




அமைப்பை மோசமாகக் கையாளும் ஆட்சியாளர்களை அம்பலப்படுத்தும் ஊடகர்களுக்கு என்ன வகையான சட்டபூர்வப் பாதுகாப்பு உலகில் உள்ளது ?

## பாக்தாத்தில் அமெரிக்கா தாக்குதல்:

அமெரிக்க ராணுவம் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் நடத்திய தாக்குதல்கள் தொடர்பான பல ஆவணங்களை விக்கிலீக்ஸ் இணையதளத்தில் 2010 வெளியிட்டார் அதன் நிறுவனரான ஜூலியன் அசாஞ்சே. இதனால் உடனடியாக விக்கிலீக்ஸ் மீது குற்ற விசாரணையை அமெரிக்கா தொடங்கியது.

நேரடியாக அவர் மீது உளவுக் குற்றச்சாட்டைச் சுமத்த முடியாத நநிலையில் விசாரணையை வேறு முனையில் திசை திருப்பி அமெரிக்கா மோசமாக நடந்துகொண்டது.இங்கிலாந்தில் இருந்த ஜூலியன் அசாஞ்சே மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தி, அவருக்கு கைது ஆணையை சுவீடன் நீதிமன்றம் மூலம் பிறப்பித்தது. இது தன்னை அமெரிக்காவுக்கு நாடு கடத்தும் முயற்சி என ஜூலியன் அசாஞ்சே குற்றம்சாட்டினார்.

அமெரிக்க அயலுறவுத்துறை அலுவலகம் மற்றவர்களுடன் வைத்திருந்த தொடர்பு, மின்னஞ்சல் தொடர்பு அனைத்தையும் அசாஞ்சே பொதுவெளியில் வெளியிட்டார். இதனால் ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு விசாரணைக்காக நாடு கடத்தப்படலாம் என பிரிட்டன் அரசு முன்பு தெரிவித்திருந்தது.

ஆயினும் இந்த நீண்ட காலவழக்கில் தோல்வியைச் சந்தித்த ஜூலியன் அசாஞ்சே ஜாமீன் விதிமுறைகளை மீறி, லண்டனில் உள்ள ஈக்குவடார் தூதரகத்தில் 2012 தஞ்சம் அடைந்தார். 2019இவருக்குவழங்கப்பட்ட அடைக்கலத்தை ஈக்குவடார் அரசு வாபஸ் பெற்றது. அதன்பின் ஜூலியன் அசாஞ்சேவை இங்கிலாந்து பொலிஸார் கைது செய்து லண்டன் சிறையில் அடைத்தனர்.

## மேற்குலக அரசுகளை உளவு பார்த்தவர்

மேற்குலக அரசுகள் மீது உளவு பார்த்ததாக ஜூலியன் அசாஞ்சே மீது 17 குற்றச்சாட்டுகள் உள்ளதால் அவரை அமெரிக்காவுக்கு நாடு கடத்தும்படி இங்கிலாந்து அதிகாரிகளிடம் அமெரிக்கா கோரிக்கை விடுத்திருந்தது.

அமெரிக்க சிறையின் கடுமையான சூழலைச் சந்திப்பது, தன்னை தற்கொலைக்கு தூண்டும் என ஜூலியன் அசாஞ்சே தரப்பில் கூறப்பட்டதால், முதலில் அமெரிக்காவின் கோரிக்கையை லண்டன் நீதிமன்றம் நிராகரித்தது.

இந்த நிலையில், கடந்தசில மாதங்களுக்கு முன்பாக ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு விசாரணைக்காக நாடு கடத்தப்பட இருக்கிறார் என்று பிரிட்டன் உள்துறைச் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

## ஆஸ்திரேலியாவில் பிறந்தவர் :

ஆஸ்திரேலியாவில் பிறந்தவரான அசாஞ்சே லண்டனில் உள்ள ஈக்வடார் நாட்டு தூதரகத்தில் 2012இல் தஞ்சம் புகுந்த பின், இராணுவ அரச ரகசியங்களை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின்பேரில் முதலில் அவரை சுவீடனிலும் பிறகு அமெரிக்காவிலும் விசாரிக்க முற்பட்டனர். பின்னர், சுவீடன் அரசு தனது வழக்கைக் கைவிட் டுவிட்டது.

ஜூலியன் அசாஞ்சே கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கிறார் என்று அவருடைய வழக்குரைஞர் தெரிவித்திருப்பதும், அவருடைய உடல்நலம் குன்றிக் கொண்டேவருவதும்ஜனநாயகத்துக்காகஇப்படிச்செயலாற்றும் விசிலூதிகளின் (Whistle Blowers) பாதுகாப்புத் தொடர்பாக தீவிரமான கேள்விகளை எழுப்பியுள்ளது. கூடவே நவீன சமூகத்தின் நாகரிக எல்லைகளின் போதாமையையும் இது சுட்டிக்காட்டுகிறது.








கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

### சர்வதேச அளவில் நடந்த

# குருசாட் கராட்டே போட்டியில் மட்டக்களப்பு மாணவன் சாதனை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு மெதடிஸ்ட் மத்திய கல்லூரியில் உயர்தர கணிதப் பிரிவில் கல்வி கற்றுவருகின்ற மட்டக்களப்பைச் சேர்ந்த முருகேந்திரன் குருசாட், ரஷ்யாவின் நோவோசோபிறிக்ஸ் நகரில் இடம்பெற்ற காட்டா மற்றும் குமித்தே போட்டிகளில் கலந்து கொண்டு தனது திறமைகளை வெளிக்காட்டி இலங்கை திருநாட்டிற்கும் பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோவில் நடைபெற்ற போட்டியிலும் இம் மாணவன் தனது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தார்.

இவர் கராத்தே போதனாசிரியர்களான நுபெ.எஸ். முருகேந்திரன் , இிராஜலட்சுமி தம்பதிகளின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.(05)

# 7,600 வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் அம்பலாங்கொடையில் பெண் கைது

அம்பலாங்கொடை, பொல்வத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வெளிநாட்டிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படும் 7,600 வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

எல்பிட்டிய ஊழல் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது அந்த வீட்டிலிருந்த பெண் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் அம்பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் எதிர்வரும் நாளை பலபிட்டி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ள நிலையில் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

(05)

# காட்டு யானைகளின் அட்டகாசத்தால் சுடலைபோல மாறிய கொழுத்துபுலவு





கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கொழுந்து புலவு பகுதியில் தொடர்ச்சியாக மக்கள் குடியிருப்புகள் பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் நாளாந்தம் மக்களின் வாழ்வாதாரம் யானைகளால் அளிக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் வாழும் 300 இற்கு மேற்பட்ட குடும்பத்தினர் நாளாந்த ஜீவனேபாயமாக விவசாயசெய்யையினையே மேற்கொள்ளப்பட்டு வரும் தென்னை, வாழை, பூசணி போன்ற பயிர்களை நாளாந்தம் யானைகள் துவசம் செய்து வருவதாகவும் அன்றைய தினம் திங்கட்கிழமை இரவும் மக்கள் குடியிருப்புகள் பகுதியில் புகுந்த ஆறு காட்டு யானைகள் 120 இற்கும் மேற்பட்ட பயன் தரக்கூடியவகையிலிலுந்த வாழைகள் 50இற்கும் மேற்பட்ட தென்னைகள் என்பவற்றை முற்றுமுழுதாக அழித்து அப்பகுதி சுடலை போல காணப்படுகிறது.

இப்பகுதிகளில் வாழும் மக்கள் மாலை ஆனதுடன் மிகுந்த அச்ச நிலைமையில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சிலர் உறவினர் வீடுகளில் இரவு பொழுதை கழிப்பதாகவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பகுதிக்கு நேரில் வந்து பார்வையிட்டு எமது பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் எனவும் அத்தோடு எமது பகுதியில் நிரந்தரமான யானை வேலி ஒன்றையும் அமைத்துத்தர வேண்டும் எனவும் இப்பகுதியின் மக்களின் உருக்கமாக வேண்டுகோளாக அமைந்துள்ளதுடி (05 - 113)




காலைக்கதிர் Kalaikkathir

# உலகின் சுவையான அன்னாசிப் பழத்தை இலங்கையில் பயிரிடுவதற்கு நடவடிக்கை


உலகில் மிகவும் சுவையான அன்னாசி

வகைகளில்ஒன்றானஎம்டி2என்றஅன்னாசிப்பழத்தை இலங்கையில்பயிரிடுவதற்குவிவசாயத்திணைக்களம் பரிந்துரைத்துள்ளது.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அன்னாசிப்பழங்களுக்கு உலக சந்தையில் அதிக கேள்வி எழுந்துள்ளது.

இந்நிலையில், இனிப்புச் சுவை மற்றும் குறைந்த அமிலத்தன்மை கொண்ட எம்டி 2 வகை அன்னாசிப்பழத்தை பயிரிட நடத்தப்பட்ட ஆய்வு வெற்றி அளித்துள்ளது.

எனவே, எம்டி 2 வகை அன்னாசிப்பழத்தை பயிரிடுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு விவசாயத் திணைக்களத்திற்கு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர ஆலோசனை வழங்கியுள்ளார்.(05)

# ஹக்மனவில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞர் கொலை

## சந்தேகநபர் கைது

ஹக்மனபிரதேசத்தில்திங்கட்கிழமை இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம்தொடர்பில்சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் ஹக்மன - கஹட்டகஹ கொரடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயது நபராவார்.

21 வயது இளைஞர் ஒருவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

முன்விரோதம் காரணமாக உயிரிழந்தவரது உறவினர் ஒருவர் இந்த கொலையைச் செய்துள்ளார் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சந்தேக நபர் பிரதேசத்தைவிட்டுத்தப்பிச்சென்றுள்ள நிலையில், ஹக்மன - கல்கந்த பிரதேசத்தில் வைத்து திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹக்மன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# இரண்டரை கோடி ரூபா மோசடிசெய்த யாழ். பெண் கொழும்பில் கைதானார்

வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களிடம் சுமார் 2 கோடியே 50 லட்ச ரூபா பணத்தை மோசடி செய்து, கொழும்பில் தலைமறைவாகி இருந்த பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகவும், வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்களை பெற்றுத் தருவதாகவும், சமூக ஊடகங்கள் ஊடாக விளம்பரங்களை செய்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலரிடம் சுமார் இரண்டரை கோடி ரூபா பணத்தை மோசடி செய்துள்ளார்.

மோசடி தொடர்பில் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த வேளை குறித்த பெண் கொழும்பில் பதுங்கியிருக்கிறார் எனத் தகவல் கிடைத்துள்ளது.

தகவலின் பிரகாரம் கொழும்பு பொலிஸாருக்கு அறிவித்து, பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

கொழும்பிலும் அப்பெண் மோசடிகளில் ஈடுபட்டுள்ளாரா? என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனவும், அதன் பின்னர் யாழ்ப்பாண பொலிஸாரிடம் அவரை கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05 - 100)

# நலன்புரி அமைப்பின் வருடாந்த ஒன்றுகூடல்

(தில்சாத் பர்வீஸ்)

அலிவாசமூகநலன்புரிஅமைப்பின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு திங்கட்கிழமை சம்மாந்துறையில் இடம்பெற்றது.

சம்மாந்துறையில் சமூக வலைத் தளங்களில் சிறந்து விளங்கும் 'டலன்ட் பிளஸ் டீவி குழுவினரின் செயற்திட்டங்களில் ஒன்றான சமூக செயற்பாட்டாளர் கௌரவிப்பு செயற்திட்டம் கடந்த காலங்களில் கட்டம் கட்டமாக இடம்பெற்று கொண்டிருக்கின்றது.

அதன் ஒரு கட்டமாக சமூக சேவையில் சிறப்பாக இயங்கி கொண்டிருக்கும் ஏ.ஜே.எம் சாதீக் அவர்களின் சேவையை பாராட்டி டலன்ட்ஸ் பிளஸ் டீவியின் ஸ்தாபக தலைவர் ரிஸான் முகம்மட் சில்ஹான் பொன்னாடை போற்றி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தார்.

இந் நிகழ்வில் பொலனறுவை மாவட்ட நீர்ப்பாசன பொறியியளாளர் எம்.எஸ்.எம். நவாஸ் மற்றும் சிரேஸ்ட கணக்காளர் எஸ்.ஏ. ஜிப்ரி ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(05)

## சுற்றுலாத்துறையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணமாக இப்பகுதிளை மேற்பார்வை செய்தார். பெகோ ட்ரெய்ல் என்பது இலங்கையின் மத்திய மலைப்பகுதிகளூடாகச் செல்லும் 300 கிலோ மீற்றர் மலையேறும் பாதையாகும். ஆசியாவின் மிக ரகசியமான பாதைகளில் இதுவும் ஒன் றாகும்.

இந்தப்பாதையானதுகண்டியில்ஆரம்பித்துஅட்டன் ஊடாக ஹோட்டன் தென்ன தேசிய வனப் பூங்கா வரையில் செல்கிறது. அதன் பின்னர் ஹப்புத்தலை எல்ல ஊடாக பயணித்து அழகிய நுவரெலியா நகரத்தில் பயணத்தை நிறைவு செய்யலாம். இந்த பாதை பிரித்தானிய காலணித்துவக் காலத்தில் பெருந்தோட் டங்களிலிருந்து தொழிற்சா லைகளுக்குச் செல்ல பயன் படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பாதையினூடாக 3.2 கிலோமீற்றர் தூரத்திற்குநடைப்பயணமாகசென்றஜனாதிபதிகோர்ட் லொட்ஜ் தோட்ட மக்களுடனும் சிநேகபூர்வமாகக் கலந்துரையாடினார்.

அப்பகுதி மக்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு சிறப்பு வரவேற்பளித்ததோடு, ஜனாதிபதி அங்குள்ள மக்களுக்கு தமிழ், சிங்களப் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

பிரவுன்ஸ் நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் கோர்ட் லொட்ஜ் தோட்டம் 264 ஹெக்டயார் பரப்பை கொண்டுள்ளதோடு. அங்கு 349 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

இந்தப் பயணத்தின்போது தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் கல்வி, சுகாதார பிரச்சினைகள் குறித்து அவதானம் செலுத்தியிருந்த ஜனாதிபதி, பாடசாலைக் கல்வியன் பின்னரான அப்பகுதி பிள்ளைகளின் எதிர்காலம் குறித்தும் ஆராய்ந்தார்.

தோட்ட மக்களின் வீட்டுப்பிரச்சினைகள் குறித்தும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார்.

கோர்ட் லொட்ஜ் தோட்டத்தில் லைட் பிரைட் (Light Bright) என்ற நாமத்திலான தேயிலை வகை உற்பத்திச் செய்யப்படுகிறது.

இப்பகுதியின் ஊடாக மலையேறும் சுற்றுலாப் பயணிகளுக்கு சுவையான தேநீர் ஒன்றை அருந்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்தும் கவனம் செலுத்தினார்.

பெகோ ட்ரெய்ல் வேலைத் திட்டத்தின் நிறுவுனரான, இலங்கையின் மலையகப் பகுதிகளில் பல வருடங்களாக சுற்றுலா பயணங்களை மேற்கொண்டிருக்கும் சுற்றுலா ஆலோசகர் மிகோல் குணாட் உலகின் மிகச் சிறந்த மலையேறுதல் களமாக இலங்கையை உலக வரைபடத்தில் இணைக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பாதையின் ஊடாக சுற்றுலா பயணத்தை மேற்கொள்ளும் பிரயாணிகளுக்கு இந்நாட்டின் வரலாறு, கலாச்சாரம், உள்நாட்டு உணவு வகைகள் உள்ளிட்ட பல்வேறு அனுபவங்களை பெற்றுக்கொள்ள வாய்ப்பு கிடைக்கும். இந்த சுற்றுலா வழிப்பாதை 22 கட்டங்களை கொண்டுள்ளதோடு, இதனூடாக ஒரே நாளில் அல்லது பல நாட்களில் பயணிக்கவும் முடியும்.

இலங்கையின் தேசிய சுற்றுலா வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக முன்னெடுக்கப்படும் பெகோ ட்ரெய்ல்

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*யாழ்ப்பாண பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

*அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:*

*தற்போதுள்ள அரசியல்வாதிகளுள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேறுபட்டவராகவே இருக்கின்றார். அவர் மக்களுக்கான தேவைப்பாடை அறிந்து அவர்களது நலன்கள் அவர்களது எதிர்காலம் அவர்களது பொருளாதாரம் என்பன எவ்வாறானதாக இருக்க வேண்டும் அல்லது கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எவ்வாறு அவற்றை உருவாக்கிக் கொடுக்கவேண்டும் என்பதிலேயே அதிக கரிசனையானவராக இருக்கின்றார்.*

*அந்தவகையில்தமிழ்மக்கள்இவ்வாறான ஒருவரை மிகவும் நேசிப்பவர்களா இருக்கவேண்டும். அதுமட்டுமல்லாது தமிழ் மக்களின் கல்வித்தரம் மேலும் உயர்வடைவதற்கானபல்வேறுமுயற்சிகளை எடுத்திருக்கிறார். குறிப்பாக எவ்வாறான தடைகள் இருந்தபோதிலும் அதன் உச்சிவரை சென்ற அவற்றை உடைத்து வெற்றிபெற்றுக் கொடுத்திருக்கின்றார்.*

*இதற்குச் சான்றாக கிளிநொச்சி அறிவியல்நகரும்யாழ் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடமும் நிற்கின்றன. அதுமட்டுமல்லாது பின்தங்கிய கிராமங்களின் விளையாட்டுத்துறை, கல்வி அகியவற்றில் மட்டுமல்லாது அப்பகுதி மக்களின் வாழ்வாதாரங்களிலும் அதிக அக்கறை செலுத்தி வருகிறார்.*

*அதேவேளை அமைச்சரின் அரசியல் சாணக்கியத்தினூடாக தொழி0வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு நன்மைகளும் எமது மக்களுக்கு கிடைத்திருக்கின்றன. அதேபோன்று எதிர்காலத்திலும் எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்ப்பதற்குத் தகுதியானவராகக் காணப்படுகின்றார்.*

*இந்த யதார்த்தத்தினை புரிந்து யாழ். பல்கலைக் கழகத்தின் தேசிய ஊழியர் சங்கத்தினர் மட்டுமல்லாது மக்களது முன்னெடுப்புக்களும் அமைந்தால் அனைத்து தேவைகளுக்குமான தீர்வுகளும் சிறப்பானதாக அமையும் என்பதுடன் அது வெற்றிபெற வாழ்த்துகின்றேன் என்றார்.*

# காதலியையும் அவரின் தாயையும் கூரிய ஆயுதத்தால் தாக்கிய நபர்

## தன் உயிரையும் மாய்த்தார்

காதலியையும் காதலியின் தாயாரையும் கூரிய ஆயுதத்தால் வெட்டித் தாக்கி விட்டு சந்தேகநபர் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார். இதன்போது இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பனிப்புலம் பகுதியில் வசித்து வந்த என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

மேற்படி நபர் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை 4.00 மணியளவில் யுவதியின் வீட்டிற்குள் நுழைந்து குறித்த யுவதி மீதும் அவரது தாயார் மீதும் கூரிய ஆயுதத்தால் தாக்குதலை மேற்கொண்டுவிட்டு, அங்கிருந்து தப்பிச் சென்று வெற்றுக் காணி ஒன்றில் உயிர்மாய்த்துள்ளார்.

இந்நிலையில், யுவதியும்யுவதியின் தாயாரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இது குறித்து மேலதிக விசாரணைகளை இளவாலைபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# சாரணர் ஒன்று கூடல்



(எம். எப். றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரண சங்கத்தின் ஏற்பாட்டில் உதவி மாவட்ட ஆணையாளருக்கான ஒன்று கூடல் நிகழ்வும், இராப்போஷனமும் அக்கரைப்பட்டி கிங் ஏசியன் ஹோட் டலில் நடைபெற்றது.



மாவட்ட ஆணையாளர் எம். ஐ. உதுமாலெவ்வை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சங்கத்தின் தவிசாளர் யூ. எல். எம். ஹாசிம் உட்பட ஏனைய உதவி மாவட்ட ஆணையாளர்களும் கலந்து கொண்டனர்.(05)

# அட்டளைச்சேனை அல்- ஜன்னா பள்ளிவாசல் நவீன நேர அறிவிப்புத் திரை வழங்கி வைப்பு!





(எம். எப். றிபாஸ்)

அட்டளைச்சேனை அல்-ஜன்னா பள்ளிவாசலின் நீண்ட கால தேவையாகவிருந்த நவீன நேர அறிவிப்பு திரை வழங்கி வைக்கபப்பட்டது.

பள்ளிவாயலின் தலைவர் முகம்மட் நசீர் தலைமையிலான குழுவினர் இலங்கை நாடாளுமன்றத்தின்துறைசார்மேற்பார்வைகுழுவின் இளைஞர் பிரதிநிதி றிஸ்கான் முகம்மட்டிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து குறித்த பள்ளிவாசலுக்கு அவர் நேரடியாகச் சென்று நிருவாகத்தினரிடம் நவீன நேர அறிவிப்பு திரையை கையளித்தார்.

இந்த நிகழ்வில் பள்ளிவாசல் நிருவாக உறுப்பினர்கள், ஊர் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# நீர்த்தாங்கி தலையில் வீழ்ந்து மூன்றரை வயதுச் சிறுமி சாவு

நீர்த்தாங்கி தலையில் வீழ்ந்து மூன்றரை வயது சிறுமி உயிரிழந்துள்ளார் என அரலகங்வில பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் பொலன்னறுவை - அரலகங்விலருஹுனுகமபிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ஹிருணி ரஷ்மிகா தேவி என்ற மூன்றரை வயது சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் தனது மூத்த சகோதரியுடன் வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது தான் நீராட வேண்டும் என்றுதனதுதந்தையிடம்கூறியுள்ளார்.

பின்னர், இந்தசிறுமிநீராடுவதற்காக குளியலறைக்கு சென்றுள்ள நிலையில் குளியலறையின்மேற்கூரையில்இருந்த நீர்த்தாங்கிதலையில்வீழ்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் அரலகங்வில பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர்.(05)

# கல்முனை – அக்கரைப்பற்று நெடுஞ்சாலையில் விபத்து



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை-அக்கரைப்பற்றுபிரதான வீதியில் அக்கரைப்பற்றை நோக்கி பயணித்த சிறிய ரக காரொன்று வேக கட்டுப்பாட்டை மீறி கடந்த திங்கள் மாலை விபத்துக்குள்ளானது.

இதனால் மாநகர சபையால் அண்மையில் அழகுக்காக வைக்கப் பட்டிருந்த பூச்சாடிகள் பல சேதத்திற் குள்ளாகின.

வாகனம் சேதமடைந்துள்ளதுடன் வாகனத்தில் பயணித்த எவருக்கும் உயிர்ச்சேதமோ காயமோ ஏற்பட வில்லை.

விபத்து சம்பந்தமாக கல்முனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கொழும்பு கோட்டை ரயில் நிலைய பயண மேடையை உடைத்தது ரயில்





கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து சிலாபம் நோக்கிப் பயணிக்கவிருந்தரயில், கோட்டைரயில் நிலையத்தின் முதலாவது மேடையில் நிறுத்த முயற்சித்தபோது அங்கிருந்த தடுப்பையும் ரயில் மேடையையும் உடைத்துக்கொண்டுசென்றுநின்றதாக ரயில்வே திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த சம்பவம் திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் முதலாம் பயண மேடையின் ஒரு பகுதியும் தடுப்பும் ரயில் எஞ்ஜினின் முன்பகுதியும் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் ரயில் சேவைகளில் பாதிப்பில்லை எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. இதுதொடர்பில்ரயில்வே திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.(05)

# சாய்ந்தமருது, பாண்டிருப்பு, மருதமுனை பிரதேசத்தில் இயங்கிய போலி மருத்துவ நிலையங்கள் சுற்றிவளைப்பு


## போலி வைத்தியரும் அகப்பட்டார்



(நூருல் ஹுதா உமர்)

பொதுமக்களின் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக அமையும்இடங்கள்மீதானதொடர்சுற்றிவளைப்பின் மற்றுமொரு அங்கமாக சட்டவிரோத மருத்துவ நிலையம் ஒன்று நேற்று சாய்ந்தமருது, பாண்டிருப்பு, மருதமுனை பிரதேசங்களில் அடையாளம் காணப்பட்டுஅந்தநிலையத்திற்கு எதிராகநடவடிக்கை எடுக்கப்பட்டது.





அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், கல்முனை

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களுக்கு தொடர்ந்தும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஷகீலா இஸ்ஸதீனின் ஆலோசனைவழிகாட்டலில்இந்ததிடீர்சுற்றிவளைப்பு நடவடிக்கை இடம்பெற்றது.

இந்த சுற்றிவளைப்பின் போது தன்னை வைத்தியராக அடையாளம்காட்டிக்கொண்டுஎவ்வித அரச அங்கீகாரமுமின்றி இயங்கிவந்த மருத்துவ நிலையமும், அழகுக்கலை நிலையமும், பயிற்சி நிலையமும்நடத்திவந்தநபர்இணங்காணப்பட்டதுடன் அவரிடமிருந்த மனித பாவனைக்கு பொருத்தமற்ற மற்றும்ஆபத்தான மருந்துகளும் கைப்பற்றப்பட்டன. மட்டுமின்றி முறையான கல்வித்தகைமையோ, தொழில்தகைமையோ இல்லாத குறித்த நபர் மருத்துவ பரிந்துரைகள் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல்அதிகார சபையின் அனுமதியில்லாத மருந்துகளை பாவித்து வந்தமையும் இதன்போது கண்டறியப்பட்டதுடன் அவர் மருத்துவராக தன்னை அடையாளப்படுத்திய சான்றுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

கல்முனை மாநகர பிரதேசத்தில் மூன்று கிளைகளைக் கொண்டு இயங்கிய இந்த நிலையம் மனித உயிர்களுக்கும், சுகாதார நிலைக்கும் சவால் விடும் வகையில் இயங்கி வந்தமையைக் கண்டறிந்து இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தேவையான மேலதிக நடவடிக்கைகளை சுதாரத்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த திடீர் சுற்றிவளைப்பில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.ஆர்.எம். அஸ்மி, கல்முனை பிராந்திய சுற்றாடல் உணவு பாதுகாப்பு பொறுப்பு வைத்தியதிகாரி வைத்தியர் ஏ.எஸ்.எம். பௌஸாத், கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரியும், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியுமான வைத்தியர் எம்.ஜெ.கே.எம். அர்சத் காரியப்பர், உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராசா, மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்களான ஏ.எம்.பாறுக், ஏ.எல்.எம். ஜெரின், பொதுச்சுகாதார பரிசோதகர்களான ஜே.எம். நஜிமுதீன், ஐ.எல்.எம்.இத்ரீஸ் என பலரும் கலந்து கொண்டனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## கல்முனை சமுர்த்தி வங்கியில் புதுவருட கொடுக்கல் வாங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை சமுர்த்தி வங்கியில் வங்கி முகாமையாளர் யூ.கே.சிறாஜ் தலைமையில் புதுவருட கொடுக்கல் வாங்கலும் கைவிஷேசமும் இடம்பெற்றது.

இதில்வங்கிவாடிக்கையாளர்கள் கணக்கு திறத்தல், கைவிஷேடத்துடனான கொடுக்கல் வாங்கல்கள் ,கள அளவீடுகள் போன்றனவும் இடம்பெற்றன .

இதன்போது வங்கி உதவி முகாமையாளர் ,வலய உதவி முகாமையாளர், கள உத்தியோகத்தர்கள், வங்கி பணி குழுவினர், வாடிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(05)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் சாவு

***கல்கிஸையில் சம்பவம்***

கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவிற்குறப்பட்டபொருள்கள்பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர்கொலைசெய்யப்பட்டுள்ளனர் என கல்கிஸ்ஸை பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றுள்ளது.

இரத்மலானை, பொருபன பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயது நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருக்கும் போது, வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த இனந்தெரியாத இரண்டு நபர்கள் இவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கல்கிஸ்ஸை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## 376 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் வசதி

### வவுனியா, கற்பகபுரத்தற்கு கிடைத்தது திட்டம்





வவுனியா, கற்பகபுரம் கிராமத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் இணைப்பு கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.மஸ்தானால் இலவசமாக நேற்று (செவ்வாய்க்கிழமை) வழங்கி வைக்கப்பட்டன.

இதன் மூலமாக வவுனியா கற்பகபுரம் கிராமத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை பெறுவதில் மக்கள் பல்வேறு இடர்பாடுகளை சந்தித்து இருந்தனர். இது தொடர்பில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கவனத்திற்கு மக்களால் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

இதனையடுத்து, 376 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இலவச குடிநீர் இணைப்பு இராஜாங்க அமைச்சரால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், வடமாகாண தேசிய நீர் வழங்கல் அதிகாரசபையின் சிரேஷ்ட சமூகவியலாளர் கோபிநாத் மற்றும் கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05 - 100)



காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக சுவிஸ் பெண்ணை ஏமாற்றிய குற்றச்சாட்டு

யாழ்ப்பாணத்தில் இருந்து புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வசிக்கும் பெண்ணைத் திருமணம் செய்வதாகக் கூறி சுமார் 50 லட்ச ரூபாவை மோசடி செய்ததாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வசித்து வருகின்றார். அவருக்கு திருமணமாகி பிள்ளைகள் உள்ள நிலையில் சுவிஸ் நாட்டில் கணவனைப் பிரிந்து பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்றார்.

இந்நிலையில்கடந்தசிலவருடங்களுக்குமுன்னர் குறித்த பெண் யாழ்ப்பாணம் வந்திருந்த போது, பெண்ணின் பூர்வீக சொத்துக்கள் தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடுகள் தொடர்பில் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்ய சென்று இருந்தார்.

முறைப்பாடு செய்யச்சென்ற நேரத்தில் பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

அந்தபழக்கம்பெண்வெளிநாடுசென்றபின்னரும் தொடர்ந்து உள்ளது. ஒரு கட்டத்தில் அது காதலாக மலர்ந்துள்ளது. அதனை அடுத்து சுவிஸ்நாட்டுபெண், இங்குள்ள பொலிஸ் உத்தியோகஸ்தருக்கு பணம், நகை என்பவற்றுடன் அன்பளிப்பு பொருள்கள் என பலவற்றை வழங்கி வந்துள்ளார்.

ஒருகட்டத்தில்பொலிஸ்பொலிஸ்உத்தியோகத்தரை சுவிஸ் நாட்டிற்கு எடுப்பதற்கான முயற்சிகளையும் அப்பெண் மேற்கொண்டுள்ளார். அதற்கு பொலிஸ் உத்தியோகத்தர் மறுப்பு தெரிவித்து, தான் நாட்டை விட்டு வர மாட்டேன் எனக் கூறியுள்ளார்.

அதனால் அப்பெண் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து தன்னை திருமணம் செய்யுமாறு வற்புறுத்திய வேளை, அதற்கு அவர் உடன்படாத நிலையில், அது தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளார்.அதனை அடுத்து, இப்பெண்ணிடம் இருந்து பெற்றுக்கொண்ட ஒரு தொகை நகை, பணம் என்பவற்றை மீள அளித்துள்ளார். மிகுதியை சிறு கால இடைவெளியில் மீள கையளிப்பதாக உறுதி அளித்துள்ளார்.

அதன் பிரகாரம் உரிய காலத்தில் மிகுதி பணம் நகையை மீள கையளிக்காததால், அப்பெண் குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார். (05)

# போதையில் குழப்பம் ஏற்படுத்திய 7 இளைஞர்கள் குடாநாட்டில் கைது

யாழ்ப்பாணத்தில்ஞாயிற்றுக்கிழமை போதையில் குழப்பங்களை ஏற்படுத்தி மோதலில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் 7 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு , யாழ்.பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்ற இசைநிகழ்வில் போதையில், குழப்பங்களை ஏற்படுத்தி மோதலில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் வன்முறை கும்பலைச் சேர்ந்த 7 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் விசாரணைகளின் பின்னர் சட்ட வைத்திய அதிகாரியிடம் முற்படுத்தி மருத்துவ பரிசோதனையை மேற்கொண்ட பின்னர் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# போதையில் பேருந்தை செலுத்திய சாரதி வவுனியாவில கைது

## புதுவருட தினத்தில் நடந்தது

புத்தாண்டு தினத்தில் மதுபோதையில் தனியார் பஸ்ஸை செலுத்திய சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கடந்த ஒரு வாரமாக நாடு முழுவதும் போக்குவரத்து பொலிஸாரால் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதுடன்மதுபோதையில் வாகனம்செலுத்துபவர்கள்தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அந்த வகையில், வவுனியா மாவட்டத்திலும் போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தமையுடன் மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்யும் நடவடிக்கையையும் முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது, மதுபோதையில் வாகனத்தை செலுத்திய குற்றச்சாட்டில் தனியார் பஸ்ஸின் சாரதியை பொலிஸார் கைது செய்தமையுடன், பஸ்ஸையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். சாரதிக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05 - 100)

# பொது வேட்பாளர் சாத்தியமில்லை என்ற முடிவைத் தமிழர்கள் தாமே எடுப்பார்கள்

## இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆருடம்



தமிழ் கட்சிகள் மற்றும் அரசியல் அனுபவம் வாய்ந்தவர்கள், புத்திஜீவிகள் என எல்லோரும் ஒன்றிணைந்து ஜனாதிபதி தேர்தலுக்கான தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியம் இல்லை என்ற முடிவினை எடுப்பார்கள் என எண்ணுகின்றேன் என கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.கே.மஸ்தான் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தமிழர் தரப்பில் பொது வேட்பாளரினை நியமிப்பது தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதிதேர்தல்இன்னும்அறிவிக்கப்படவில்லை என்றாலும் ஒக்ரோபர் மாதம் முதலாம், இரண்டாம் கிழமைகளில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதன் காரணமாக இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

என்னைபொறுத்தவரைஜனாதிபதிதேர்தலுக்கான தமிழ் தரப்பிலான பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டு வெற்றி அடைவார் என்றால் பரவாயில்லை. ஆனால் ஜனாதிபதி தேர்தலைப் பொறுத்த வரை தேசியக் கட்சியைச் சார்ந்த ஒருவரே வெற்றி பெறுவார்.

எங்களை பொறுத்தவரை நாங்கள் ஆதரிக்கின்ற ஜனாதிபதியை வெற்றி அடைய வைப்பதற்கான முயற்சிகளை நாங்கள் எடுப்போம். மேலும் தமிழ் தரப்பில் பொது வேட்பாளர் என்ற விடயம் என்பது எந்த விதத்தில் சாத்தியம் அல்லது இதன் ஊடாக என்ன நன்மை கிடைக்கும் என்று எமக்குத் தெரியவில்லை.

கடந்த காலங்களில் ஏதோவொரு பிரதான வேட்பாளர்கள் ஒருவரையே ஆதரித்துள்ளனர். அதுவே சரியானதாக அமையும் என நான் எண்ணுகின்றேன். ஒருமித்த கருத்துடன் ஒரு ஜனாதிபதி வேட்பாளரை போடுவதன் மூலம் வெற்றியை நோக்கி செல்வதாக இருந்தால் பரவாயில்லை. ஆனால் அது சாத்தியமில்லை.

எனவே, தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற முயற்சி ஏன் ஏற்பட்டுள்ளது என்பது புரியவில்லை. மேலும், தமிழ் கட்சிகள் மற்றும் அரசியல் அனுபவம் வாய்ந்தவர்கள் புத்திஜீவிகள் என எல்லோரும் ஒன்றிணைந்து ஜனாதிபதி தேர்தலுக்கான தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியம் இல்லை என்ற முடிவை எடுப்பார்கள் என எண்ணுகின்றேன் எனத் தெரிவித்தார். (05 - 100)

# கம்பளையில் பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்து 9 வயது சிறுவன் உயிரிழப்பு

கம்பளை நகரத்தின் அம்பகமுவ வீதியில் உள்ள பாதுகாப்பற்ற கிணறு ஒன்றில் வீழ்ந்து 9 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு பிரதேசத்தில் வசிக்கும் 9 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுவனின் பெற்றோர் கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் அவர்கள் விடுமுறைக்காக கம்பளைபிரதேசத்தில்உள்ளஅவர்களது வீட்டிற்குச் சென்றிருந்தபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின் போது இந்த சிறுவன் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் சிறுவனின் தாய் கடைக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில், கடைக்குச் சென்று விட்டு வீடு திரும்பிய தாய், சிறுவன் வீட்டில் இல்லாததை அவதானித்துள்ள நிலையில் பிரதேசவாசிகளின் உதவியுடன் சிறுவனைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது, இந்தசிறுவன்வீட்டிற்கு அருகில்உள்ளகிணற்றொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ள நிலையில் சிறுவனை கம்பளை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல முற்பட்ட போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இதற்கு முன்னரும் இந்த பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து பெண் ஒருவரும் குழந்தையொன்றும் உயிரிழந்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

(05)

# காரைதீவு உணவகங்களில் அதிரடியாக திடீர் சோதனை

(நூருல் ஹுதா உமர்)



உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்குஉறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் காரைதீவு சுகாதார வைத்தியஅதிகாரிடாக்டர்தஸ்லிமா வஸீரின்ஆலோசணைக்கிணங்க காரைதீவு பிரதேச பல்வேறுபட்ட உணவுகள் கையாளும் நிறுவனங்கள், மீன் விற்பனை நிலையங்கள்,இறைச்சிவிற்பனை நிலையங்கள், உணவு கண்காட்சிகள் மற்றும் சமய ஸ்தலங்களில் சித்திரை பண்டிகை காலத்தை முன்னிட்டு திடீர் பரிசோதனை இடம்பெற்றது.

உணவகங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கின்மை, நீண்ட நாள்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை குளிர்சாதனப்பெட்டிகளில் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருள்களின் தரம் போன்றன காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய அதிகாரிகளால் இந்த கள பரிசோதனையில் பரிசோதிக்கப்பட்டது.

மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களால் இதன் போது உணவு மற்றும் நீரால் பரவக்கூடிய நோய்கள் தொடர்பான விழிப்புணர்வும் வர்த்தகர்களுக்கு



வழங்கப்பட்டது.(05)

# லிந்துலை சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தீ விபத்து



நுவரெலியா, லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிறேட்வெஸ்டன் கல்கந்தை தோட்ட பிரிவில் தீ விபத்து சம்பவம் ஒன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை 02 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்து சம்பவத்தில் கல்கந்தைதோட்டத்தில்இயங்கிவரும் பிள்ளைகள் அபிவிருத்தி நிலையம் திடீர் தீவிபத்துக்கு உள்ளாகியுள்ளதாக சம்பவம் தொடர்பில் விசாரணை செய்து வரும் லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இந்த தீ விபத்து சம்பவம் மின்சார ஒழுக்கு காரணமாகவா அல்லதுயாரேனும்தீவைத்துள்ளனரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளைசெய்துவருகின்றனர்.

அதேநேரத்தில் குறித்த பிள்ளைகள் அபிவிருத்திநிலையம்மக்கள் குடியிருப்பு பகுதிக்கு அருகில் காணப்படுகிறது.

தீ விபத்து இடம்பெற்ற சமயத்தில்பாரியவெளிச்சமும் புகை நாற்றமும் வருவது உணர்ந்த அருகில்வசிக்கும் மக்கள் வீட்டைவிட்டு வெளியில் பதறி கொண்டு வந்துதீயைகட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் எனத் தெரிவிக்கின்றனர்.

அதேநேரத்தில் இந்த தீ விபத்தால் சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் கூரை பகுதி பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஆரம்ப கல்வி கற்கும் சிறார்களின் புத்தகங்கள்,



உபகரணங்கள்பலதீப்பிடித்துபாதிப்பை ஏற்படுத்தியுள்ளதுகுறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.04.2024இல் வெளியிடப்பெற்றது